சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 401 / 2022**

வா.சா.2. பூபதி 01.10.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியும். எனது தாயார் விஜயலெட்சுமி உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான். எனது பெயரில் வழக்கு சொத்திற்கு அருகாமையில் தனிச் சொத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனக்கு வயது 45 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை வாதி தங்கராஜ் அனுபவித்து வந்த விபரம் எனக்கு 40 வருடங்களுக்கு மேலாக தெரியும் என நான் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அப்படியெனில் வாதி தாவா சொத்தை அனுபவித்து வந்தது 5 வயதில் இருந்தே தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு தென்புறம் உள்ள கிணற்றில் இருந்து மின் மோட்டார் மூலம் தண்ணீரை கொண்டு வந்து வாதி விவசாயம் செய்து வருவதாக சொல்லியுள்ள நான் எனக்கு அந்த கிணறு அமைந்துள்ள நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியும். அது எனது தாயாருக்கு சொந்தமானது. எனது தாயார் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க ஏன் வரவில்லை என்ற காரணத்தை என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும். அவருக்கு வயது ஆகிவிட்டது. எனது தாயார் நல்ல உடல் நிலையில் இருந்து வருகிறார் என்றும் நான் தான் அவருக்கு உடல் நிலை சரியில்லை என்று பொய் சொல்கிறேன் என்றும் தாவா சொத்து 3-ம் பிரதிவாதியால் ஒட்டன்சத்திர சார்பதிவ ஆவண எண்.14/2007-ல் 4-ம் பிரதிவாதி கருப்பாயிக்கு நில ஒப்படை செய்த சொத்து என்றும் எனக்கு இந்த விபரம் தெரியும் என்றும் அதை மறைத்து வேண்டுமென்றே வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.10.01 18:17:49 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்